Australian Government
Services Australia

TAMIL

# Status Resolution Support Services (SRSS) கொடுப்பனவு - உங்களுடைய வருமானத்தை அறிவித்தல்

நீங்களோ, உங்களுடைய வாழ்க்கைத்துணைவரோ வேலையின் மூலம் வருமானம் ஈட்டுவீர்களேயானால், அதை நீங்கள் எமக்கு அறியத்தரவேண்டும். சரியான தொகையை நாங்கள் உங்களுக்குச் செலுத்த இயலுவதற்காக இப்படிச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

சரியான தொகையை நாங்கள் உங்களுக்குச் செலுத்த இயலுவதற்காக, நீங்களோ, உங்களுடைய வாழ்க்கைத்துணைவரோ ஈட்டும் மொத்த வருமானம் (வரி செலுத்துவதற்கு முன்பு) எவ்வளவு என்பதை நாங்கள் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. கடன்தொகை ஒன்று உங்களுக்கு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக வேலையின் மூலம் நீங்கள் ஈட்டும் வருமானம் எவ்வளவு என்பதை நீங்கள் எமக்குக் கட்டாயம் அறிவித்தாகவேண்டும். செலுத்தவேண்டிய தொகையை விட அதிகமான தொகை உங்களுக்கு செலுத்தப்பட்டால், அந்தப் பணத்தை நீங்கள் எமக்குத் திருப்பிச் செலுத்தவேண்டியிருக்கும்.

## நான் அறிவிக்கவேண்டியது என்ன?

அநேக மூலங்களிலிருந்து நீங்கள் வருமானம் பெற்றுக்கொண்டிருக்கக் கூடும்.

வேலையிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் உள்ளடங்குவன:

- கூலித்தொகைகள் மற்றும் சம்பளங்களிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானம்
- ஊக்கத்தொகைகள்
- கூடுதல் வீதங்களிலும், மேலதிக நேர வேலையின் காரணமாகவும் கொடுக்கப்படும் ஊதியங்கள்
- பின்தங்கிய சம்பளம் அல்லது விடுமுறைக்கால சம்பளம்
- தரகுத்தொகை
- சுய வேலை.

மற்ற மூலங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களாவன:

- அன்பளிப்புகள் அல்லது படித்தொகைகள்
- இலாபங்கள்
- இறந்தோரது சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம்
- சுகவீனக் காப்பீடு அல்லது விபத்துக் காப்பீடு.

நீங்களோ, உங்களுடைய வாழ்க்கைத்துணைவரோ வெளிநாடுகளிலிருந்து பெறும் வருமானம் எதையும் நீங்கள் கட்டாயமாக அறிவிக்கவேண்டும். மற்ற நாடுகளிலிருந்து கிடைக்கும் ஓய்வூதியங்களை இது உள்ளடக்கும்.

## நாங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விடயங்கள் யாவை?

உங்களுடைய, அல்லது உங்களுடைய வாழ்க்கைத்துணைவருடைய வருமானத்தினை அறிவிக்கும்பொழுது நாங்கள் பின் வரும் விடயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கும்:

- நீங்கள் அறிவிப்பு செய்யும் காலப்பகுதியில், உங்களுடைய சம்பளத்துண்டில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு உங்களுக்கு வேலை தரும் ஒவ்வொரு முதலாளியும் உங்களுக்குச் செலுத்திய மொத்தத் தொகை.
- வேலை தருபவரது வர்த்தகப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் உங்களுக்குத் தெரிந்தால் அவரது Australian Business Number (ABN) (ஆஸ்திரேலிய வர்த்தக இலக்கம்) ஆகியவற்றை உளடக்கிய உங்களுக்கு வேலை தரும் முதலாளியைப் பற்றிய விபரங்கள். உங்களுடைய முதலாளியின் ABN என்ன என்பதை உங்களுடைய சம்பளத்துண்டில் நீங்கள் பார்க்கலாம், அல்லது உங்களுடைய முதலாளியை நீங்கள் கேட்கலாம்
- நீங்கள் வேலை செய்யத் துவங்கிய திகதி.

## அறிவிப்பை நான் எப்போது செய்யவேண்டும்?

நீங்களோ, உங்களுடைய வாழ்க்கைத்துணைவரோ வேலை ஒன்றை ஒன்றைப் பெற்றால், வேலை ஒன்றை நிறுத்தினால், அல்லது உங்களுடைய வருமானம் மாறினால், உடனடியாக நீங்கள் அதை எமக்கு அறியத்தரவேண்டும்.

உங்களுடைய கொடுப்பனவு தொடரவேண்டுமானால், நீங்கள் வேலைக்குப் போகத் துவங்கியதும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை உங்களுடைய வருமானத்தை நீங்கள் அறிவிக்கவேண்டியிருக்கும். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை உங்களுடைய வருமானத்தை நீங்கள் அறிவிக்காவிட்டால் உங்களுடைய கொடுப்பனவு நின்றுவிடும். நீங்கள் தாமதமாக அறிவிப்பீர்களேயானால், உங்களுடைய கொடுப்பனவு தாமதப்படும்.

## என்னுடைய வருமானத்தை நான் எவ்வாறு அறிவிப்பது?

நீங்கள் அறிவிப்பு செய்யவேண்டிய தினத்தில் நீங்கள் உங்களுடைய வருமானத்தை அறிவிக்கவேண்டும். பின்வரும் வழிகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றி நீங்கள் அறிவிப்பைச் செய்யலாம்:

இணையவழியில்:

- myGov வழியாக Centrelink இணையவழிக் கணக்கைப் பயன்படுத்தி
- Express Plus Centrelink மொபைல் செயலி மூலம். ஆங்கிலம், அரபு, சீனம், பாரசீகம் (ஃபார்சி) மற்றும் வியட்நாமியம் ஆகிய மொழிகளில் அறிவிப்பைச் செய்வதற்கு இந்த செயலி கிடைக்கும்.

தொலைபேசி மூலமாக:

**131 202**-ஐ அழைத்து கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள், அதையடுத்து கிடைக்கும் முதல் 'சேவை அலுவல'ருடன் நீங்கள் தொடர்புபடுத்தப்படுவீர்கள். அழைக்கும்பொழுது உங்களுடைய 'வாடிக்கையாளர் அணுகல் இலக்க'த்தையும் 'வாடிக்கையாளர் சுட்டு இலக்க'த்தையும் தயாராக வைத்திருங்கள்.

## நான் சுய-தொழில் செய்துவந்தால் என்ன செய்வது?

- நீங்கள் பூர்த்தி செய்து அனுப்புவதற்காக Business Details form (MOD F) எனும் படிவம் ஒன்று உங்களுக்குக் கொடுக்கப்படும்.
- ஒரு கணக்காளர் (அக்கவுண்ட்டண்ட்) மூலமாக, அல்லது Profit and Loss Statement form (SU580) எனும் படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலமாக 3 மாதங்களுக்கான 'இலாப-நஷ்ட'க் கணிப்பீடு ஒன்றை நீங்கள் கொடுக்கவேண்டியிருக்கும்.
- உங்களுடைய இலாப-நஷ்டம் எவ்வளவு என்பதை மதிப்பீடு செய்து உங்களுடைய சராசரி இரு-வாரக் கொடுப்பனவு எவ்வளவு என்பதை நாங்கள் கணக்கிடுவோம்.
- ஒரு முழு நிதி ஆண்டிற்கான வர்த்தகத்தைக் காண்பிக்கும் வருமான வரித் திருப்பல் ஒன்றை நீங்கள் செய்யும்வரை, உங்களுடைய இலாப-நஷ்டம் எவ்வளவு என்பதை 3 மாதங்களுக்கு ஒரு முறை நாங்கள் மதிப்பீடு செய்வோம்.

## மேலதிகத் தகவல்களுக்கு

- ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/SRSS**-இற்குச் செல்லுங்கள். வேறு மொழிகளிலுள்ள தகவல்களுக்கு 'Translate'-இன் மீது சொடுக்குங்கள்
- உங்களுடைய மொழியிலுள்ள தகவல்களை நீங்கள் வாசிக்கவும், செவிமடுத்துக் கேட்கவும், அல்லது காணவும் இயலுமான **servicesaustralia.gov.au/yourlanguage** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- Centrelink -இன் கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றி எம்முடன் உங்கள் மொழியில் பேசுவதற்கு **131 202**-ஐ அழையுங்கள்
- Medicare -இற்கு **132 011**-ஐயும், - Child Support இற்கு **131 272**-ஐயும் அழையுங்கள். மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவையா என்பதை எமக்குத் தெரிவியுங்கள், ஒருவரை நாங்கள் இலவசமாக ஏற்பாடு செய்வோம்
- சேவை மையம் ஒன்றிற்குச் செல்லுங்கள்.

குறிப்பு: ஆஸ்திரேலியாவில் எவ்வொரு இடத்திலிலும் இருக்கும் '13' இலக்கங்களுக்கு உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு நிலைப்படுத்தப்பட்டதொரு வீதத்தில் கட்டணம் அறவிடப்படும். உள்ளூர் அழைப்பு ஒன்றிற்கு ஆகும் விலையிலிருந்து இந்த வீதம் மாறுபடலாம், அத்துடன் தொலைபேசி சேவை வழங்குநர்களுக்கு இடையேயும் இது வேறுபடலாம். உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து '1800' இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகள் இலவசம். பொதுத் தொலைபேசிகள் மற்றும் கைப்பேசிகளிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு ஆகும் நேரம் கணக்கிடப்பட்டு அதியுயர் வீதக் கட்டணங்கள் அறவிடப்படலாம்.

## பொறுப்புத்துறப்பு:

இந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவல்களானவை கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளுக்கானதொரு வழிகாட்டி என்ற நோக்கத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவு ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா என்பதை முடிவு செய்வதும், உங்களுடைய குறிப்பிட்ட சூழல்களுக்கேற்ற விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கான முடிவினை மேற்கொள்வதும் உங்களுடைய பொறுப்பாகும்.

# Status Resolution Support Services (SRSS) payment — Reporting your income

If you or your partner get income from work you need to tell us. This is so we can pay you the right amount.

We need to know the gross income (amount before tax) you or your partner get so we can pay you the right amount. You must report your employment income to avoid getting a debt. If you are overpaid you will have to pay the money back.

## What do I need to report?

You can receive income from a variety of sources.

Income from work includes:

- gross income from wages and salary
- bonuses
- penalty rates and overtime
- back pay or holiday pay
- commission
- self employment.

Income from other sources:

- gifts or allowances
- profits
- income from a deceased estate
- sickness or accident insurance.

You must also report any income you or your partner get from overseas. This includes pensions from other countries.

## What do we need to know?

When reporting your or your partner's income, we need to know:

- the gross amount each employer paid you during your reporting period as shown on your payslip
- your employer's details—including their business name, address, phone number and Australian Business Number (ABN), if known. You will find your employer's ABN on your payslip, or you can ask your employer
- the date you started work.

## When do I report?

You must tell us immediately if you or your partner get a job, stop working or your income changes.

Once you start work you need to report your income every 2 weeks for your payment to continue. If you do not report every 2 weeks your payment will stop. If you report late, your payment will be late.

## How do I report my income?

You need to report your income on your reporting day. You can report using any of the following:

Online:

- Centrelink online account through myGov
- Express Plus Centrelink mobile app. The app is available to report in English, Arabic, Chinese (Simplified), Persian (Farsi) and Vietnamese.

By phone:

Call **131 202** and follow the prompts which will direct you to the first available Service Officer. Have your Customer Access Number or Customer Reference Number handy when you call.

## What if I am self-employed?

- You will be given a Business Details form (MOD F) to complete and return.
- You need to provide a 3 month estimate of Profit and Loss, either from an accountant or by completing a Profit and Loss Statement form (SU580).
- We will assess your profit and loss and work out your average fortnightly profit.
- We will assess your profit and loss every 3 months until you have an income tax return that represents a full financial year of trading.

## For more information

- Go to **servicesaustralia.gov.au/SRSS** for more information in English. For information in other languages, click ‘Translate’
- Go to **servicesaustralia.gov.au/yourlanguage** where you can read, listen to or watch information in your language
- Call **131 202** to speak with us in your language about Centrelink payments and services
- Call **132 011** for Medicare and **131 272** for Child Support. Let us know if you need an interpreter, and we will arrange one for free
- Visit a service centre.

Note: calls from your home phone to ‘13’ numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to ‘1800’ numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.

## Disclaimer

The information contained in this publication is intended only as a guide to payments and services. It’s your responsibility to decide if you wish to apply for a payment and to make an application with regard to your particular circumstances.